රාජ්‍ය සේවා, පළාත් සභා හා පළාත් පාලන අමාත්‍යාංශය
அரச சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
Ministry of Public Services, Provincial Councils and Local Government

නිදහස් චතුරශ්‍රය, කොළඹ 07, ශ්‍රී ලංකාව. சுதந்திரச் சதுக்கம், கொழும்பு 07, இலங்கை. Independence Square, Colombo 07, Sri Lanka

| දුරකතන தொலைபேசி: (94) 011- 2696211-13 Telephone (94) 011- 2166000 | ෆැක්ස් தொலைநகல்: (94) 011- 2695279 Fax | ඊ-මේල් மின்னஞ்சல்: information@pubad.gov.lk E-mail | වෙබ් අඩවිය இணையத்தளம்: www.pubad.gov.lk Web Site |
|---|---|---|---|


| | | | | | |
|---|---|---|---|---|---|
| මගේ අංකය எனது இல My No | PS/GT/2020 (IIIවෙළුම) | ඔබගේ අංකය உமது இல Your No | | දිනය திகதி: Date | 2022.01.03 |

சகல அமைச்சுக்களின் செயலாளர்கள்
பிரதம செயலாளர்கள்/ இராஜாங்க அமைச்சுக்களின் செயலாளர்கள்
ஆணைக்குழுக்களின் செயலாளர்கள்
மாவட்ட செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்

***<u>வேலையற்ற பட்டதாரிகளுக்கு/ டிப்ளோமாதாரிகளுக்கு தொழில் வழங்கும் நிகழ்ச்சித்திட்டம் 2020 இன் கீழ் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட பயிலுநர்களை அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நிரந்தர அடிப்படையில் நியமித்தல்</u>***

இலவசக் கல்வியை அடிப்படையாகக் கொண்டு தாபிக்கப்பட்டுள்ள பட்டம்/ டிப்ளோமா வழங்கும் நிறுவனங்களிலிருந்து வெளியேறும் இளைஞர்களை பயனுறுதி வாய்ந்த முறையில் நாட்டின் அபிவிருத்திச் செயற்பாடுகளுக்குப் பயன்படுத்தும் குறிக்கோளுடன் அதிமேதகு சனாதிபதி அவர்களால் 2020 ஆம் ஆண்டில் சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை விஞ்ஞாபனம் தொடர்பில் அமைச்சரவையினால் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு இணங்க பட்டதாரிகளுக்கு/ டிப்ளோமாதாரிகளுக்கு தொழில் வழங்கும் நிகழ்ச்சியின் கீழ் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட 51682 பட்டதாரிகள் ஏற்கனவே பல்வேறு அரசாங்க நிறுவனங்களில் பயிற்சி பெற்று வருகிறார்கள். அந்தப் பயிலுநர்களில் ஒரு வருடப் பயிற்சியைப் பூர்த்தி செய்த பட்டதாரிப் பயிலுநர்களை 2022.01.03 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் அபிவிருத்தி உத்தியோகத்தர்களாக இணைந்த சேவைக்கும் மாகாண அரச சேவையின் நிரந்தர சேவைக்கும் நியமிப்பதற்கும் ஒரு வருடப் பயிற்சிப் பூர்த்தி செய்திராத பட்டதாரிப் பயிலுநர்களை 2022.04.01 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் அபிவிருத்தி உத்தியோகத்தர் நிரந்தர சேவைக்கு நியமிக்கும் வரையில் 2022.01.03 ஆம் திகதி முதல் நிரந்தரமாகப் புதிய பயிற்சி நிலையங்களில் இணைப்பதற்கும் 2021.09.13 ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அத்துடன் இந்நிகழ்ச்சிக்கான நடைமுறைகளுக்கு அரச சேவை ஆணைக்குழுவின் அனுமதியும் ஏற்கனவே எனக்கு கிடைத்துள்ளது.

02. அதற்கிணங்க, இணைந்த சேவைக்கான நியமனக் கடிதங்கள் அச்சிடப்பட்டு அவர்கள் சேவையில் இணைக்கப்படும் நிறுவனங்களுக்கு அனுப்புவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்பதைப் பணிவுடன் அறியத் தருகின்றேன்.

03. அது தவிர எனது 2021.12.10 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் மாகாண அரச சேவையின் அபிவிருத்தி உத்தியோகத்தர் நியமனங்களை வழங்குவது தொடர்பில் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டிய முறை தொடர்பில் மாகாண சபைகளின் பிரதம செயலாளர்களுக்கு

அறிவிக்கப்பட்டுள்ளதுடன் நியமனங்கள் வழங்கப்பட வேண்டிய உத்தியோகத்தர்களின் பெயர்ப் பட்டியல்களை 2 கட்டங்களாக மாகாண சபைகளுக்கு அனுப்புவதற்கு ஏற்கனவே நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

## 04. கடமையைப் பொறுப்பேற்றல்

**இந்த நிரந்தர நியமனம் வழங்கலின் கடமைகளைப் பொறுப்பேற்பதற்குப் பொருத்தமான வேலைத் திட்டமொன்றை உருவாக்க வேண்டும் என்பதை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன்.**

i. உத்தியோகத்தர்கள் சேவையில் இணைக்கப்பட்டுள்ள சேவை நிலையங்களை 2022.01.07 ஆம் திகதி முதல் இந்த அமைச்சின் MISCO மென்பொருளில் பிரவேசித்து அறிந்து கொள்வதற்கான வாய்ப்பு அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் வழங்கப்படும். அத்துடன் குறித்த நிறுவனங்களின் தலைவர்களும் மேற்குறித்த மென்பொருளில் பிரவேசித்து தமது நிறுவனத்தில் சேவையில் இணைக்கப்பட்டுள்ள அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் தகவல்களை பெற்றுக்கொள்ள முடியும். அதற்கிணங்க பொருத்தமான ஒரு நேர அட்டவணைக்கு இணங்க உத்தியோகத்தர்களை வரவழைத்து கடமைகளைப் பொறுப்பேற்கச் செய்வது பொருத்தமானதாகும்.

**குறிப்பு:**
**உத்தியோகத்தர்களின் நியமனக் கடிதங்களின் மூலப் பிரதிகளும் திணைக்களத் தலைவர்களுக்கான பிரதிகளும் ஒரு தொகுதியாகத் தயாரிக்கப்பட்டு சரிபார்ப்புப் பட்டியலொன்றுடன் உங்களுக்கு அனுப்பப்படும்.**

ii. மேற்படி நிகழ்ச்சியின் கீழ் இணைந்த சேவை பணிப்பாளர் நாயகத்தினால் நியமனக் கடிதங்கள் வழங்கப்படும் அனைத்து உத்தியோகத்தர்களும் அவர்கள் வதியும் மாவட்டத்தினுள்/ மாகாணத்தினுள் சேவையில் இணைக்கப்படக் கூடிய விதத்தில் பட்டதாரிப் பதவியணித் தேவைகளைக் கவனத்தில் எடுத்து சேவையில் இணைக்கப்பட்டுள்ளனர். பட்டதாரி உத்தியோகத்தர்களின் பதவியணித் தேவைகள் தீவிரமாக மட்டுப்படுத்தப்பட்ட ஒரு சில மாவட்டங்கள் தவிர, மேற்படி நிகழ்ச்சியின் கீழ் நியமனம் பெறும் உத்தியோகத்தர்கள்/ பயிலுநர்கள் மிகக் கூடுதலானோருக்கு அவர்கள் வதியும் பிரதேசத்திற்கு அண்மையில் இருந்து அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படும் அபிவிருத்திச் செயற்பாடுகளுக்குப் பங்களிப்புச் செய்வதற்கான வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

iii. இந்நிகழ்ச்சியின் கீழ் பயிற்சி பெற்ற உத்தியோகத்தர்களில் அதிகமானோரை சிறப்பான முறையில் மாகாண சபைகள் மற்றும் அரசாங்க அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களில் சேவை இணைப்பது மிகவும் சிரமமான ஒரு பணியாகக் காணப்பட்டதுடன் இயன்ற வரையில் அனைவருக்கும் நியாயம் கிடைக்கும் விதத்தில் அது மேற்கொள்ளப்பட்டிருப்பதனால் திணைக்களத் தலைவர்கள் தங்களிடம் நியமனம் பெற்று வரும் அபிவிருத்தி உத்தியோகத்தர்களை அன்பாக வரவேற்று பதவியணித் தேவைகள் காணப்படுகின்ற உப அலுவலகங்களில் உடனடியாக சேவையில் இணைக்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

*iv.* எனினும், கொவிட்-*19* நிலைமையின் காரணமாக பெருந்தொகையான உத்தியோகத்தர்கள் ஒரே தடவையில் ஒரு நிறுவனத்திற்கு கடமைகளைப் பொறுப்பேற்க வருகை தருவது சிக்கலாக அமைய முடியும் என்பதனால் அந்த உத்தியோகத்தர்கள் கடமைகளைப் பொறுப்பேற்பதற்கு போதுமான கால அவகாசம் வழங்கப்படும். அதன் மூலம் நிறுவனத் தலைவர்களும் குறிப்பிட்டதொரு கால அட்டவணைப்படி உத்தியோகத்தர்களை வரவழைத்து கடமைகளை ஒப்படைப்பதற்கான சந்தர்ப்பம் கிடைக்கும் *2022.01.10* ஆம் திகதியிலிருந்து ஒரு வார காலத்திற்குள் உத்தியோகத்தர்களை வரவழைத்து கடமைகளை ஒப்படைப்பதற்கு வாய்ப்புக் கிடைக்குமாயின், அந்த உத்தியோகத்தர்களுக்கு சனவரி மாதத்துக்கான சம்பளங்கள் செலுத்துவதற்குத் தேவையான செயற்பாடுகளை செய்வதற்கான வாய்ப்புக் கிடைக்கும் என்பதையும் கவனத்தில் கொள்வது பொருத்தமானது.

குறிப்பு:

**உங்களால் அழைக்கப்படும் திகதியில் கடமையை பொறுப்பேற்காது, தமது தனிப்பட்ட காரணங்களுக்காக தாமதமாக பொறுப்பேற்கும் அலுவலர்கள் தொடர்பில் நியமனக் கடிதத்தில் *02* ஆம் பந்தியில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது .**

*V.* **அனைத்து உத்தியோகத்தர்களும்/ பயிலுநர்களும் சேவையில் இணைக்கப்படும் சேவை நிலையத்திலேயே கடமைகளைப் பொறுப்பேற்பது அவசியமாகும்.**

கவனத்தில் கொள்க :-

**கடமைகளை ஒப்படைக்கும் செயற்பாடுகளை *MISCO* முறைமையின் ஊடாக மேற்கொள்வதற்கான படிவம் தொடர்பில் இணைந்த சேவை பணிப்பாளர் நாயகத்தினால் அறிவுறுத்தல்கள் வழங்கப்படும். அதற்கிணங்க, உங்களிடம் கடமைகளைப் பொறுப்பேற்க வருகை தரும் உத்தியோகத்தர்களுக்கு அவர்கள் கடமைகளைப் பொறுப்பேற்றதாக *MISCO* முறைமையில் இற்றைப்படுத்தியதன் பின்னரே நியமனக் கடிதங்களை வழங்க வேண்டும். அத்துடன் கடமைகளைப் பொறுப்பேற்காத உத்தியோகத்தர்களுக்கு நியமனக் கடிதங்களை வழங்கக் கூடாது.**

*VI.* நீங்கள் பட்டதாரிப் பதவியணித் தேவைகள் தொடர்பில் எனக்கு அனுப்பிய கோரிக்கைகளின் அடிப்படையிலேயே நிரந்தர நியமனம் பெறும் உத்தியோகத்தர்களும் பயிற்சிக்காக நிரந்தரமாக சேவை நிலையங்களில் இணைக்கப்படும் உத்தியோகத்தர்களும் சேவையில் இணைக்கப்பட்டுள்ளனர். உங்களின் கீழ் பயிற்சி பெற்ற உத்தியோகத்தர்களை உங்களிடமே சேவையில் இணைக்குமாறு பெயர்ப் பட்டியல்களுடன் சில கோரிக்கைகள் கிடைத்திருந்ததுடன் இயன்ற வரையில் அந்தக் கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. எவ்வாறாயினும் ஏனைய மாகாண சபைகளுக்கு கணிசமான எண்ணிக்கை பதவியணியை வழங்க வேண்டியுள்ளமை, தற்போது கடமையாற்றும் சேவை நிலையம் தொடர்பில் தகவல்களை இற்றைப்படுத்தும் போது உரிய முறையில் இற்றைப்படுத்தப்படாமை, சில கோரிக்கைகள் கிடைக்கும் போது நியமனச் செயற்பாடுகள் பூர்த்தியடைந்திருந்தமை ஆகிய விடயங்களின் அடிப்படையில் திணைக்களத் தலைவர்களின் அனைத்துக் கோரிக்கைகளும் பூர்த்தி செய்யப்படாதிருப்பதற்கான வாய்ப்புக்கள் உள்ளன.

VII. மாகாண அரச சேவைக்கு நியமிக்கப்படும் உத்தியோகத்தர்கள் கடமைகளைப் பொறுப்பேற்பதற்கான வேலைத் திட்டம் உரிய மாகாண சபைகளால் மேற்கொள்ளப்படும்..

குறிப்பு:

**அரச சார்பு நிறுவனங்களினதும் செயற்திட்டங்களினதும் கோரிக்கைகளை கவனத்தில் எடுத்து அவ் அலுவலர்களையும் அதே அரச சார்பு நிறுவனங்கள் மற்றும் செயற்திட்டங்களுக்கு உரித்தான அமைச்சின் செயலாளரிடம் இணைக்கப்பட்டுள்ளார்கள். அதனால் அந்த நிறுவனத் தலைவர்களுடன் கலந்துந்துரையாடி தேவையான உத்தியோகத்தர்களை அந்த நிறுவனங்களுக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். அவ்வாறு தேடிப் பார்க்காது ஒழுங்கின்றி இந்த அமைச்சுக்கு திருப்பியனுப்புவதனால் நிறுவனங்களுக்கு அத்தியவசியமான பதவியணி கிடைக்காமல் போக முடியும் என்பதுடன் நியமனம் கிடைத்த உத்தியோகத்தர்களும் சிரமங்களுக்கு ஆளாவர்.**

05. **சம்பளங்கள் மற்றும் பயிலுநர் கொடுப்பனவுகளைச் செலுத்துதல்**

i. மேலே குறிப்பிட்டவாறு 2022.01.03 ஆம் திகதி முதல் அபிவிருத்தி உத்தியோகத்தர்களாக நியமிக்கப்படும் உத்தியோகத்தர்களுக்கும் தொடர்ந்தும் பயிலுநர்களாக இணைக்கப்படும் பயிலுநர்களுக்கும் 2022 சனவரி 03 முதல் நடைமுறைக்கு வரும் வகையில் சம்பளங்களையும் பயிலுநர் கொடுப்பனவுகளையும் செலுத்துவதற்கான நிதி ஏற்பாடு 2022 ஆம் ஆண்டுக்காக அரச சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சிற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. உங்களிடம் சேவையில் இணைக்கப்பட்ட உத்தியோகத்தர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப சனவரி மாதத்தில் சம்பளங்களை/ கொடுப்பனவுகளைச் செலுத்துவதற்கான நிதி ஏற்பாடுகள் என்னால் உங்களுக்கு ஒதுக்கப்படுவதுடன் பெப்ரவரி மாதம் முதல் தேவையான நிதி ஏற்பாடுகளை உங்களிடம் கடமைகளைப் பொறுப்பேற்ற எண்ணிக்கையின் அடிப்படையில் அரச சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் பிரதான நிதி உத்தியோகத்தரிடம் கேட்டு ஒதுக்கிக் கொள்ள முடியும்.

ii. மாகாண சபைகளுக்குத் தேவையான நிதி ஏற்பாடுகளும் இந்த அமைச்சினால் ஒவ்வொரு மாகாண பிரதமசெயலாளருக்கும் ஒதுக்கப்பட்டுள்ளன.

iii. எவ்வாறாயினும் 2021 டிசம்பர் மாதத்திற்கான பயிலுநர் கொடுப்பனவுகளை ஏற்கனவே செலுத்தப்பட்டு வந்த விதத்திலேயே உரிய மாவட்ட செயலகங்களின் ஊடாகச் செலுத்துவதற்கு மாவட்ட செயலலாளர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

iv. கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச் சட்ட நிறுவனங்களில் சேவையில் இணைப்பதற்காக அமைச்சுக்களுக்கு நியமனம் வழங்கப்பட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்குச் சம்பளங்கள் செலுத்துவதற்கான நிதி ஏற்பாடுகள் இந்த அமைச்சினால் உரிய நிரல் அமைச்சுக்கு வழங்கப்படும்.

v. அவ்வாறு சம்பளங்களைச் செலுத்தும் போது கடமைகளைப் பொறுப்பேற்கும் திகதிக்கு முன்னைய தினம் வரை அந்த உத்தியோகத்தர்கள் முன்னைய பயிற்சிச் சேவை நிலையத்தில் தொடர்ச்சியாக பயிற்சிக்காகச் சமுகமளித்ததாக உறுதிப்படுத்திக் கொள்வது அவசியமாகும்.

vi. 2023 ஆம் ஆண்டிலிருந்து சம்பளங்கள் செலுத்துதற்கு மாகாண சபைகளுக்கும் அமைச்சுக்களுக்கும், திணைக்களங்களுக்கும், மாவட்ட செயலகங்களுக்கும் தேவையான நிதி ஏற்பாடுகள் பொதுத் திறைசேரியினால் வழங்கப்படும்.

## 06. பதவியணிக்கான அனுமதி

i. பதவியணித் தேவைப்பாடுகள் தொடர்பில் உங்களால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள் பற்றி இந்த நிகழ்ச்சிக்கு வழிகாட்டல்களை வழங்குவதற்காக நியமிக்கப்பட்ட அமைச்சரவை உப குழுவில் கலந்துரையாடிய பின்னரே அமைச்சுக்களுக்கும் திணைக்களங்களுக்கும் மாவட்ட செயலகங்களுக்கும் உத்தியோகத்தர்கள் சேவையில் இணைக்கப்பட்டுள்ளனர்.

ii. மேலும், தேசிய பாடசாலைகள், மாகாணப் பாடசாலைகள் மற்றும் கல்வி அலுவலகங்களில் சேவையில் இணைக்கப்பட்டுள்ள பயிலுநர்களை இச்சந்தர்ப்பத்தில் பாடசாலைகளிலேயே தற்காலிகமாக வைத்திருப்பதற்கு எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கு இணங்க அந்தப் பயிலுநர்கள் இணைந்த சேவையிலும் மாகாண அரச சேவையிலும் அபிவிருத்தி உத்தியோகத்தர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

iii. எவ்வாறாயினும், இந்நிகழ்ச்சியுடன் இணைந்த வகையில் மேற்கொள்ளப்படும் இலங்கை ஆசிரியர் சேவைக்கான ஆட்சேர்ப்புக்களுக்குரிய பதவியணி மீளாய்வுகள் அல்லது வேறு விதத்தில் பாடசாலைகளில் வெற்றிடமாகும் அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிகளை ஒழிப்பது தொடர்பில் முகாமைத்துவ சேவைப் பணிப்பாளர் நாயகத்திற்கு அறிவிக்கும் செயற்பாடு கல்வி அமைச்சின் செயலாளரையும் குறித்த மாகாணங்களின் பிரதம செயலாளர்களையும் ஒருங்கிணைப்புச் செய்து வருடத்தின் ஒவ்வொரு காலாண்டின் இறுதியிலும் மேற்கொள்ளப்பட வேண்டும்.

iv. பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு வழங்கும் இந்நிகழ்ச்சியுடன் தொடர்புடைய உத்தியோகத்தர் குழுவின் ஒரு உறுப்பினராக முகாமைத்துவ சேவைகள் பணிப்பாளர் நாயகமும் இருந்ததுடன் இந்நிகழ்ச்சியின் கீழ் பதவியணியை சேவையில் இணைப்பது பற்றி குழுக் கூட்டங்களில் தொடர்ச்சியாகக் கலந்துரையாடி உரிய இணக்கப்பாடுகள் எட்டப்பட்டுள்ளன. அத்துடன் உங்களிடம் சேவையில் இணைக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை தொடர்பில் முகாமைத்துவ சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கு அறிவிப்பதற்கும் இணைந்த சேவை பணிப்பாளர் நாயகத்தினால் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனால் பதவியணிகளுக்கு அங்கீகாரம் பெறும் போது சிக்கல்கள் உருவாகமாட்டா.

v. அதற்கிணங்க, அமைச்சுக்களிலும், திணைக்களங்களிலும் சேவையில் இணைக்கப்பட்டுள்ள அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் கடமைகளைப் பொறுப்பேற்கச் சந்தர்ப்பங்களை ஏற்பாடு செய்து கொடுக்குமாறும், எந்தவொரு உத்தியோகத்தரையும் மிகை உத்தியோகத்தர்களாகக் கருதி நடவடிக்கை எடுக்க வேண்டாம் என்றும் அறிவிக்கப்படுகின்றது.

*07.* இந்நிகழ்ச்சித் திட்டத்துறை வெற்றிகரமாக நடத்திச் செல்வதற்கு இற்றை வரை நீங்கள் அளித்த ஒத்தழைப்புகளை மதிப்பதுடன் தொடர்ந்தும் தங்களது ஒத்துழைப்புகள் அவ்வாறே கிடைக்கும் என்றும் ஆவலுடன் எதிர்பார்க்கின்றேன்.

ஒப்பம்./ ஜே.ஜே. ரத்னசிரி

செயலாளர்

அரசாங்க சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

பிரதிகள்:

01 ஜனாதிபதிசெயலாளர், ஜனாதிபதி காரியாலம்

02. பிரதம அமைச்சின் செயலாளர், பிரதம அமைச்சர் அலுவலகம்

03. அமைச்சரவை செயலாளர், அமைச்சரவை அலுவலகம்

04. செயலாளர், நிதி அமைச்சு

05. செயலாளர், கல்வி அமைச்சு

06. செயலாளர், அரச சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

07. செயலாளர், நிதி ஆணைக்குழு

02. பணிப்பாளர் நாயகம், முகாமைத்துவ சேவைகள் திணைக்களம்

03. பணிப்பாளர் நாயகம், தேசிய வரவுசெலவுத் திட்ட திணைக்களம்